**டிஸ்ரன்ஸ் லேர்னிங் சென்ரர் லிமிட்டட் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

டிஸ்ரன்ஸ் லேர்னிங் சென்ரர் லிமிட்டட்டின் (''கம்பனி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி

வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்தவேண்டியவைகள்

#### (அ) பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக இருந்த ரூபா 4,136,528 தொகையான பெறவேண்டிய வரி தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 நவம்பர் மற்றும் திசெம்பரில் இறுதிக் கணக்குகளில் நட்டக்கழிவிற்காக கருத்தில் கொள்வதற்கு அறவிடப்படக்கூடிய தொகை/ சீராக்கங்களை மதிப்பிடுவதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகளுடன் DLC பலமுறை கலந்துரையாடியிருந்தது. | அறவிடப்படக்கூடிய மீதிகளை அறவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்கள் | | | |
| (i) | 2.3 அத்தியாயம் | மீளாய்வாண்டிற்கான மூலோபாயத் திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இணங்கப்பட்டது. DLC 2024 ஆம் ஆண்டிற்கான மூலோபாயத் திட்டம் (2023-2027), செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு ஆகியவற்றை தயாரித்து அவற்றிற்கு சபையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளதுடன் 2024 இல் இந்தப் பிரிவுடன் இணங்கும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டியதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 4.2 (ஏ) அத்தியாயம் | மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் இரண்டு கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | முன்னைய தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிதி முகாமையாளரின் பதவி விலகலுடன் 2023 இல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிதி முகாமையாளர் இல்லாமல் DLC செயற்பட்டது. கடந்த காலாண்டில் சபை உறுப்பினர்களின் மாற்றங்கள் காரணமாக கணக்காய்வுக் கூட்டத்தை நடாத்த முடியவில்லை. | -மேற்படி- |
| (iii) | கூட்டிணைந்த ஆளுகை கையேட்டின் 3.4 ஆம் பிரிவு | ஒவ்வொரு பொது முயற்சியாலும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனி ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | இணங்கப்பட்டது. PED சுற்றறிக்கைகளுக்கு இணங்க DLC ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் தயாரிக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளதுடன் 2024 இல் அங்கீகார செயன்முறையை பூர்த்தி செய்ய முடியும். | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 9,152,671 இலாபமொன்றானதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 4,250,333 ஆக இருந்தது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 13,403,004 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வரி சேமிப்புக்கள் மற்றும் நிதி வருமானம் ரூபா 11,881,287 ஆல் அதிகரித்தமையே இம் முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் 2006 இன் 8.9.1 இன் பிரகாரம் முறையான ஏற்பு கடிதம் இல்லாமல் அல்லது ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு உணவு வழங்கல் சேவை வழங்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது உணவு வழங்கல் சேவைக்காக கம்பனிக்கு ரூபா 1,751,230 தொகையை செலுத்தியிருந்தது. | பெறுகை வழிகாட்டல்களிற்கு இணங்க உணவு வழங்கல் சேவை வழங்குநரை DLC மீண்டும் தெரிவுசெய்து 2024 இல் விரிவான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும். | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்க வேண்டியதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாராளுமன்றத்திற்கு ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 நவம்பர் மாதத்தில் வரிசை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, DLC பற்றிய விரிவான விளக்கக்காட்சி தலைமை நிர்வாக அதிகாரினால் நிகழ்த்தப்பட்டது. ஏனைய தேவைப்பாடுகளுடன் கூடிய அனைத்து அறிக்கைகளும் ஏற்கனவே வரிசை அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டு, 2024 ஏப்ரலில் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு வரிசை அமைச்சு மூலம் சமர்ப்பிக்கப்படும். | வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |